நாள். 12.12.2024

எம்.சி.ஓ.பி எண். 1077/2023

ம.சா. 1

பெயர். எட்வின் ரகு

த/பெ.திரு. அந்தோனி

வயது. 37

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ம.சா.ஆ 1 முதல் 12 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**2வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் எனது மனைவியும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். நான்தான் வண்டியை ஓட்டினேன். விபத்து நடந்த இடத்தில் இருபுறமும் வண்டிகள் செல்லும். விபத்து சமயத்தில் ஹெல்மட் அணிந்திருந்தேன். நான் இடது பக்கமாக விழுந்ததால் தலையில் காயம் ஏற்பட்டது. நான் பூஞ்சேரி மருத்துவமனைக்கு சென்றேன் பின்பு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எதிரே வந்த வாகனம் என்மீது நேரருக்கு நேராக மோதிவிட்டது. இந்த விபத்தே என்னுடைய அஜாக்கிரதையினால் தான் நடந்தது என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு எதுவும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 6 மருத்துவ பில் நான் உள்நோயாளியாக இருந்தபோது ம.சா.ஆ. 5லேயே கணகிடப்பட்ட நிலையில் அந்த தொகையை பெற ம.சா.ஆ. 6 மருத்துவ செலவு தொகை பெற தக்கவர் இல்லை என்றால் சரியல்ல. மருத்துவ காப்பீடு எதுவும் எடுக்கவில்லை. நான் விபத்து சமயத்தில் மளிகை கடையில் வேலை செய்கிறனே். எனது மாத வருமானம் ரூ.20,000/-. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டகக்பட்ட தொகை மிகவும் அதிகம் என்றும் அதை 2ம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

TAMILSELVI S

Digitally signed by TAMILSELVI S